இணைப்பு–I

(410 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கோரிக்கை எண் 18–கதர், கிராமத்தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)

அறிவிப்புகள், 2010–2011

பட்டு வளர்ச்சித் துறை

1. உயர் விளைச்சல் தரும் மல்பரி ரகங்களை நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்குதல்

தரமான மகசூல் தரும் மல்பரி இரகங்களை நடவு செய்யும் விவசாயிகளுக்கு மானியத் தொகை வழங்கப்படுகின்றது. 2009-2010 ஆம் ஆண்டில் 2,500 ஏக்கர்களில் நடவு மேற்கொண்ட விவசாயிகளுக்கு ரூ.103.13 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது. இஃது, 2010-2011 ஆம் ஆண்டில், 7,500 ஏக்கர்களில் மல்பரி நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.4,125/- வீதம், ரூ.309.38 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

2. பட்டுப்புழு வளர்ப்புக் கூடம் கட்ட உதவியளித்தல்

சுகாதாரமான முறையில் பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொள்ளவும், அதிக அளவு பட்டுக்கூடு அறுவடை செய்வதற்கும் தனியாக புழு வளர்ப்புக் கூடம் மிகவும் அவசியமாகிறது. இத்தகைய கூடங்களை அமைப்பதற்கு 2009-2010 ஆம் ஆண்டில் 850 விவசாயிகளுக்கு ரூ. 512.50 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது. இந்த மானியம் 2010-2011 ஆம் ஆண்டில், 1,240 விவசாயிகளுக்கு, ரூ.643.50 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

3. சொட்டு நீர் பாசனத்திற்கு உதவித் தொகை

2009-2010 ஆம் ஆண்டில் மல்பரி நடவு செய்யப்படும் 750 ஏக்கர் நிலப்பரப்பில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க ரூ. 112.50 இலட்சம்

[2010 மே 3

மானியமாக வழங்கப்பட்டது. இந்த மானியம், 2010-2011 ஆம் ஆண்டில், 1500 ஏக்கர் மல்பரி தோட்டங்களுக்கு, சொட்டு நீர்ப்பாசனம், தெளிப்பு நீர்ப்பாசனம் அமைக்க ரூ. 22,500 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

4. நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள்/பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்ய உதவியளித்தல்

தரமான வெண்பட்டு நூல் உற்பத்திக்கு நமது மாநிலம் அதிக முக்கியத்துவம் அளித்து வருகின்றது. 2008-2009 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த மல்பரி பரப்பில் தமிழகத்தில் 7.5 விழுக்காடு மட்டுமே மல்பரி பரப்பு இருந்த போதிலும், இந்தியாவின் வெண்பட்டு உற்பத்தியில் 30.9 விழுக்காடு அளவுக்கு சாதனை படைத்து, தேசிய அளவில் தமிழ்நாடு முதலிடம் பெற்றது. வெண்பட்டுப் புழு வளர்ப்பை மேம்படுத்தவும், பட்டுப்புழு வளர்ப்பில் உற்பத்தி செலவினை குறைத்து, பட்டுக் கூடுகளின் தரத்தை மேம்படுத்த நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் அவசியம். ஆகவே, 2010-2011 ஆம் ஆண்டில் 1,200 விவசாயிகளுக்கு நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.360.00 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

5. பெண் பட்டு விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு உடல்நலக் காப்பீட்டுத் திட்டம்

பெண் பட்டு விவசாயிகள், பட்டு வித்தகங்கள் மற்றும் பட்டு நூற்பு அலகுகளில் பணியாற்றும் மகளிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் உடல்நலக் காப்பீட்டுத் திட்டம், மத்திய மாநில அரசு நிதி உதவியுடன், 2008-2009 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 2009-2010 ஆம் ஆண்டில் 4000 குடும்பங்கள் பயனடைந்தன. 2010-2011 ஆம் ஆண்டில் பட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ள 26000 குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் காப்பீட்டு வசதி பெறுவர். இதற்கென நடப்பாண்டில் ரூ.36,17,380/- காப்பீட்டுக் கட்டணமாக மாநில அரசால் செலவிடப்படும்.

2010 மே 3]

6. பட்டுக் கைத்தறிகளை நவீனப்படுத்துதல்

2010-2011 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம், பரமக்குடி, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் உள்ள 4,000 பழமையான பட்டு கைத்தறிகளை மேம்படுத்த உதவித் தொகையாக ரூ. 300.00 இலட்சம் வழங்கப்படும். இதனால் நெசவாளர்களின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதோடு அவர்களது வேலை பளுவும் குறையும்.

7. பட்டுப்புழு வளர்ப்பை ஊக்குவிக்க காப்பீட்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் முதன்முறையாக, விவசாயிகளுக்கு கிரியா ஊக்கி திட்டத்தின்கீழ் பட்டுத் தொழிலுக்கான “காப்பீட்டுத் திட்டம்”, நடப்பாண்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், 5,000 பட்டு விவசாயிகள் பயன் அடைவர்.

8. வெண்பட்டு நூலுக்கு ஊக்கத் தொகை

வெண்பட்டு நூல் உற்பத்தி செய்யும் நூற்பாளர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகைக்கான நிதி ஒதுக்கீடு சென்ற ஆண்டில் ரூ. 2.40 இலட்சமாக இருந்தது. இஃது, நடப்பாண்டில் ஆறு மடங்கு உயர்த்தப்பட்டு ரூ. 15.00 இலட்சம் அளவுக்கு வழங்கப்படும்.

9. பட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் சாதனைகள்

100 முட்டை தொகுதிகளுக்கு சராசரி பட்டுக்கூடுகள் அறுவடை 2009-2010 ஆம் ஆண்டில் 65.43 கிலோ கிராம் என்ற அளவை எட்டி, நாட்டில் தமிழகம் முதன்மை நிலை வகிக்கிறது. மொத்த முட்டைகள் விநியோகத்தில் 27 விழுக்காடு இளம்புழுக்களாக விநியோகிக்கப்பட்டு, இந்த இனத்திலும் தமிழகம் முதல் நிலை வகிக்கிறது. தொகுப்பு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வெண்பட்டு முட்டை வளர்ப்பு, பட்டுக்கூடு உற்பத்தி மற்றும் பட்டு உற்பத்தி ஆகிய இனங்களிலும் தமிழகம் முன்னிலை வகிக்கிறது. தமிழகம் வெண்பட்டு உற்பத்தியிலும், தேசிய அளவில் முதல் நிலையில் உள்ளது. மேற்கண்ட சாதனைகளை கருத்தில் கொண்டு, மத்திய பட்டு வாரியம், தமிழ்நாட்டிற்கு வழங்கும் நிதி ஒதுக்கீட்டை, இந்நிதியாண்டில் இரண்டு மடங்குக்குமேல் உயர்த்தவுள்ளது.

[2010 மே 3

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்: "பூம்புகார்"

1. கைவினைஞர்களுக்கான காப்பீட்டுத் திட்டம்

2010-2011 ஆம் ஆண்டில், ராஜீவ் காந்தி கைவினைஞர்கள் நலவாழ்வு காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், நலிவுற்ற மற்றும் வறுமை கோட்டிற்குக்கீழ் உள்ள 10,000 கைவினைஞர்களுக்கு, அவர்கள் செலுத்த வேண்டிய காப்பீட்டுக் கட்டணத்தை, தமிழக அரசே செலுத்தி, அவர்களுக்கு மருத்துவக் காப்பீடு வசதிகளைச் செய்து கொடுக்கும்.

2. அகில இந்திய கண்காட்சிகள்

கைவினைப் பொருட்களுக்கான அகில இந்திய கண்காட்சி "காந்தி சில்ப் பஜார்" தமிழ்நாட்டில், நான்கு இடங்களில், ரூ. 54.00 இலட்சம் செலவில் ஏற்பாடு செய்யப்படும்.

3. நேரடி கொள்முதல் செய்ய நிதியம் அமைத்தல்

தஞ்சாவூர் மாவட்டம், சுவாமிமலையில் தொடங்கப்படவுள்ள மூலப்பொருள் வங்கியில் பதிவு செய்துள்ள கைவினைஞர்களிடமிருந்து பஞ்சலோகச் சிலைகள் மற்றும் பித்தளை விளக்குகளை நேரடி கொள்முதல் செய்வதற்கு ரூ. 50.00 இலட்சம் செலவில் ஒரு நிதியம் அமைக்கப்படும்.

4. இதர மாநில கைத்திறன் வளர்ச்சிக் கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழகத்தில் உள்ள கைவினைஞர்களின் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பினை அதிகரிக்கும் நோக்கத்துடன், தமிழ்நாடு கைத்திறத் தொழில் வளர்ச்சிக் கழகம், (பூம்புகார்) பிற மாநிலங்களில் உள்ள அரசு கைத்திறத் தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செய்துகொள்ளும்.

5. புதிய விற்பனை நிலையங்கள் அமைத்தல்

பூம்புகார் நிறுவனம் தன்னுடைய வியாபாரம் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்காக இந்நிதியாண்டில் கும்பகோணம், தூத்துக்குடி,

2010 மே 3]

இராஜபாளையம் மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் சுமார் ரூ. 1.00 கோடி செலவில் புதிய விற்பனை நிலையங்களை ஏற்படுத்தும். இதன்மூலம் தமிழகத்தில் உள்ள கைவினைஞர்களின் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பினை அதிகரிக்க இயலும்.

6. சர்வதேச கண்காட்சிகளில் பங்கேற்றல்

2010-2011 ஆம் ஆண்டில் சான்பிரான்சிஸ்க்கோ (அமெரிக்கா), பெர்மிங்ஹாம் (இங்கிலாந்து), மிலன் (இத்தாலி) மற்றும் ஹாங்காங் (சீனா) ஆகிய நான்கு இடங்களில் நடைபெற உள்ள வெளிநாட்டு கண்காட்சிகளில், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் கலந்துகொள்ளும்.

7. கைவினைஞர்களுக்கு இலவசமாக இயந்திர உபகரணங்கள் வழங்குதல்

தமிழ்நாட்டில் பல்வேறு கைத்திறத் தொழில்களில் ஈடுபட்டு வரும் கைவினைஞர்களுக்கு, ரூ. 5.00 இலட்சம் மதிப்பிலான இயந்திர உபகரணங்கள் 2010-2011 ஆம் ஆண்டில் இலவசமாக வழங்கப்படும்.

8. சிறந்த கைவினைஞர்களுக்கான ஓய்வூதியத் தொகை

தமிழ்நாட்டைச் சேர்ந்த தேசிய விருது மற்றும் மாநில விருது பெற்ற கைவினைஞர்களுக்கு அவர்கள் 60 வயதை பூர்த்தி செய்யும்போது, மாதாந்திர ஓய்வூதியமாக ரூ. 1,000/- வழங்கப்படும்.

9. கைவினைத் தொழிலில் பயிற்சி அளித்தல்

பஞ்சலோகச் சிலை வடிவமைத்தல், பித்தளை விளக்கு வேலைப்பாடு, தஞ்சாவூர் கலைத்தட்டு மற்றும் தஞ்சாவூர் ஓவியம் முதலியன உருவாக்குதல், கற்சிற்பம் ஆகிய கைத்திறத் தொழில்களில் ரூ.10 இலட்சம் செலவில், இந்நிதியாண்டில், பயிற்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

10. தமிழ்நாட்டில் உள்ள கைவினைஞர்களைப் பற்றிய கணக்கெடுப்பு

தமிழ்நாட்டில் பல்வேறு கைத்திறத் தொழில்களில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களைப் பற்றிய விரிவான கணக்கெடுப்பினை மத்திய அரசின் உதவியுடன் தமிழ்நாடு கைத்திறத் தொழில் வளர்ச்சிக் கழகம் மேற்கொள்ளும்.

11. சென்னையில் கைத்திற வடிவமைப்பு நிலையம் நிறுவுதல்

மத்திய அரசின் நிதி உதவியுடன் ரூ. 100.00 இலட்சம் செலவில், ஒரு கைத்திற வடிவமைப்பு நிலையம் சென்னையில் அமைக்கப்படும்.

12. மரச் சிற்பங்களுக்கான மூலப்பொருள் வங்கி நிறுவுதல்

கள்ளக்குறிச்சியில், ரூ. 2.00 கோடி செலவில் மத்திய அரசின் நிதி உதவியுடன் மரச் சிற்பங்களுக்கான மூலப்பொருள் வங்கி நிறுவப்படும். இதன்மூலம் விழுப்புரம் மற்றும் சேலம் மாவட்டங்களிலுள்ள கள்ளக்குறிச்சி, சின்னசேலம், தம்மம்பட்டி மற்றும் ஆத்தூர் ஆகிய பகுதிகளில் உள்ள கைவினைஞர்கள் தமது மரச் சிற்ப வடிவமைப்புக்கு தேவைப்படும் மூலப்பொருட்களை வட்டியின்றி பெற இயலும்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

1. வாரியத்தின் நிதிநிலைமையை சீரமைத்தல்

நீண்ட காலமாக நட்டத்தில் இயங்கி வந்த கதர் வாரியம், தற்போது அரசு எடுத்த சீரிய முயற்சிகளால் இலாபகரமாக இயங்கத் தொடங்கியுள்ளது. கதர் கிராமத் தொழில் வாரியத்தின் செயல்பாட்டினை மேலும் சீரமைக்கும் நோக்கத்துடன், இந்நிதியாண்டில் ஒவ்வொரு தொழில் பிரிவிற்கும் தொகுப்பு நிதி (Corpus Fund) *அளிக்கப்பட்டு அதனைக் கொண்டு உற்பத்தி மற்றும் விற்பனை தடையின்றி நடைபெற வழிவகை செய்யப்படும்.*

2. காதி நூல் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியம்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் கதராணையரக சான்று பெற்ற சர்வோதயச் சங்கங்களில் பணிபுரியும் கதர் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களின் நலனைக் காக்க, காதி நூல் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியம் அமைக்கப்படும். இந்த நலவாரியத்தின்மூலம், தமிழ்நாட்டில், கதர் நூற்பு மற்றும் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 24,000 தொழிலாளர்கள் மருத்துவ உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை மற்றும் விபத்து/மரண உதவித் தொகை போன்ற பல நலத் திட்ட உதவிகளைப் பெறுவர்.

3. கதர் அங்காடிகளின் செயலாக்கத்தை விரிவாக்குதல்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டில் தமிழகமெங்கும் செயல்பட்டு வரும் கதரங்காடிகளில்

2010 மே 3]
தேன், பதநீர், கைக்குத்தல் அரிசி போன்ற ஆரோக்கியமான உணவுப் பொருட்கள் மற்றும் அன்றாட தேவைக்கான மளிகைப் பொருட்கள் விற்பனை செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4. காந்தி நினைவகத்தைப் புதுப்பித்தல்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பொன்விழா ஆண்டினை முன்னிட்டு, மதுரை மேலமாசி வீதியில் உள்ள "காந்தி நினைவகம்" சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் புதுப்பிக்கப்படும்.

5. குறளகத்தில் கண்காட்சிக் கூடம் அமைத்தல்

தமிழ்நாட்டிலுள்ள கைவினைஞர்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்கள் பயனடையும் வகையில், சென்னை குறளகத்தில் கண்காட்சிக் கூடம் ஒன்று உருவாக்கப்படும்.

6. மாநகராட்சிகளில் உள்ள கதரங்காடிகளை நவீனப்படுத்துதல்

சென்னை, ஈரோடு, திருப்பூர், திருச்சி, மதுரை, கோவை, சேலம், திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள கதரங்காடிகள் இந்நிதியாண்டில் நவீனப்படுத்தப்படும்.

7. பிடாகம் கைமுறை காகித அலகினை நவீனப்படுத்துதல்

விழுப்புரம் மாவட்டம் பிடாகம் கைமுறை காகித அலகில், காகிதங்கள் மற்றும் அட்டைகள் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் இயந்திரங்களை ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீனப்படுத்தி, இந்த கைமுறை காகித அலகின் மாதாந்திர உற்பத்தித் திறன் இரண்டு மடங்காக அதிகரிக்கப்படும்.

8. மாநிலமெங்கும் கண்காட்சிகள்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் நடப்பாண்டில் 50 ஆண்டுகளைப் பூர்த்தி செய்கின்றது. பொன்விழாவான இந்த சிறப்பு நிகழ்வைக் குறிக்கும் வகையில், இளைய சமுதாயத்தினரிடையே, கதர் கிராமத் தொழில்கள் பற்றிய விழிப்புணர்வினை அதிகரிக்கும் நோக்கத்துடன் மாநிலமெங்கும் மாவட்ட அளவில் கண்காட்சிகள் நடத்தப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

9. கதராடை அணிவோம், கதர்த் தொழிலை ஊக்குவிப்போம்

கதராடைகளை அதிகம் விற்பனை செய்து அதன் மூலம் தமிழகத்திலுள்ள கதர் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் ஒவ்வொருவரும் ஒரு கதராடையையாவது வாங்கும்படி ஊக்குவிக்க, சிறப்பு விளம்பர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம்

1. பதநீர் கொள்முதல் விலையை உயர்த்துதல்

நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு பனைத் தொழிலாளர்களிடமிருந்து பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தால் வாங்கி விற்பனைச் செய்யப்படும் பதநீருக்கான கொள்முதல் விலை, லிட்டர் ஒன்றுக்கு ரூ. 7/- லிருந்து ரூ. 10/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

2. நடைமுறை மூலதனத்திற்கு நிதியுதவி

பனைத் தொழிலாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யும் பதநீரை, குளிர்சாதன வசதிகளைக் கொண்டு பதப்படுத்தவும், தேவையான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தவும், பதநீர், கருப்புக்கட்டியினை கொள்முதல் செய்திடத் தேவையான நடைமுறை மூலதனத்தை அதிகரிக்கவும், 2010-2011 ஆம் ஆண்டில் ஒரு கோடி ரூபாய், தமிழக அரசால் பனைப்பொருள் வாரியத்திற்கு மானியமாக வழங்கப்படும்.

3. கருப்புக்கட்டி விற்பனை

மருத்துவ நற்குணங்கள் கொண்ட கருப்புக்கட்டியினை அனைவரும் வாங்கக்கூடிய வகையில் நவீன வடிவமைப்புடன் கூடிய பொட்டலங்களில் விற்பனைச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.